## புனித அசிசியாரின் மன்றாட்டு

✞

இறைவா!
உன் சாந்தியின் கருவியாக
என்னை ஆக்கியருள்!

எங்கு பகையுள்ளதோ அங்கு அன்பையும்,
எங்கு மனவருத்தமுள்ளதோ அங்கு மன்னிப்பையும்,
எங்கு ஐயமுள்ளதோ அங்கு நம்பிக்கையும்,
எங்கு இருள் உள்ளதோ அங்கு ஒளியையும்,
எங்கு துன்பமுள்ளதோ அங்கு இன்பத்தையும்,
யான் பரப்பிட அருள் தாரும்!
யான் என் ஆறுதலுக்காக அலைவதை விட்டு
ஆறுதலைக் கொடுக்க விழைவேனாக!
என்னை மற்றார் புரிந்துகொள்ள வேண்டுமென்று
துடிப்பதை
விடுத்து, ஏனையோரைப் புரிந்துகொள்ள யான்
விழைவேனாக!
என்னை மற்றவர்கள் நேசிக்க வேண்டுமென்று
தவிப்பதை
விடுத்து, மற்றவர்களை நேசிக்க முற்படுவேனாக!

ஏனெனில்,
கொடுப்பதன் மூலம் தான் பெற்றுக்கொள்ள முடியும்.
மன்னிப்பதன் மூலம் தான் மன்னிப்பையடைய முடியும்.
மடிவதன் மூலம் தான் முடிவில்லா வாழ்விற்குப்
பிறக்க
முடியும். - ஆமென்.

(புனித அசிசியார்)

கத்தோலிக்க தமிழர் நலன்புரி மன்றம்
Catholic Tamil Welfare Association